# 04 எம்மைச் சூழ உள்ள உயிரினங்கள்

எம்மைச் சூழப் பல உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் மிருகங்களும், பறவைகளும் அடங்கும். பறவைகளிலும் மிருகங்களிரும் சிலவற்றை வீடுகளில் வளர்க்கின்றார்கள். காடுகளில் வாழும் சில உயிரினங்கள் மிருகக்காட்சிச்சாலையில் பராமரிக்கப்படுகின்றன.



பின்னவலைக்குச் சென்றால் யானைகளை காணலாம். அநாதை யானைகள் இங்கே பராமரிக்கப்படுகின்றன. யானைகளின் சரணாலயமாக இவ்விடம் விளங்குகின்றது. குட்டி யானைகள் முதல் பெரிய யானைகள் வரை பார்ப்போரை மகிழ்விக்கின்றன. இவை உல்லாச பிரயாணிகளை மிகவும் கவருகின்றன.

ஆடு, மாடு, நாய், பூனை, முயல் என்பன வீட்டு மிருகங்கள் ஆகும். ஆடு, மாடு, முயல் என்பவற்றின் பண்ணை அம்பேவெலியில் இருக்கின்றது. மாடுகளிலிருந்து இயந்திரங்கள் மூலமாகப் பால் கறக்கப்படுகின்றது. இங்கு பாற்பொருட் தொழிட்சாலையும் உள்ளது.

காடுகளிலே சிங்கம், புலி, கரடி, மான், மரை, குரங்கு போன்ற பல வகையான மிருகங்கள் வாழ்கின்றன. பறவைகளில் வீட்டில் வளர்க்கும் பறவைகள் சிலவும் காட்டில் வாழும் பறவைகள் பலவும் உள்ளன. கோழி, வாத்து என்பவற்றை வீடுகளிலும் பண்ணைகளிலும் வளர்க்கின்றனர்.

கிளி, புறா, மைனா, சிட்டுகுருவி என்பவற்றை செல்லப் பிராணிகளாக வீடுகளில் வளர்க்கின்றனர். இவை பிஞ்சுகள் காய்கள், பழங்கள் என்பவற்றை உணவாக உட்கொள்கின்றன.


காகம், பருந்து, குயில், மயில், மரங்கொத்தி, மீன்கொத்தி என்பன காடுகளில் சுதந்திரமாகப் பறந்து திரிகின்றன. இவை அனைத்தையும் தெஹிவலை மிருககாட்சிச்சாலையில் கண்டுகளிக்கலாம்.

வண்ணத்து பூச்சியும் தேனீயும் தேனைச் சேகரிக்கும் பிராணிகள். நாம் எப்போதும் மிருகங்களிடத்திலும் பறவைகளிடத்திலும் அன்பு காட்டுவோம். அவற்றை பாதுகாப்போம்.

பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவோம்.
සතුන් වෙත කරුණාව දක්වමු.

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| இனம் | - | ජාතිය |
| உல்லாசப் பிராணி | - | සංචාරකයා |
| மிருகம் | - | සතා |
| சரணாலயம் | - | අභය භූමිය |
| பறவை | - | පක්ෂියා |
| பாற் தொழிற்சாலை | - | කිරි කර්මාන්ත ශාලාව |
| மிருகக்காட்சிச் சாலை | - | සත්තු වත්ත |
| கறக்கப்படுகின்றது | - | දෙවනවා |
| உயிரினம் | - | ජීවියා |
| பாதுகாப்போம் | - | ආරක්ෂා කරමු |



## செயற்பாடு 01

பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.
පහත සඳහන් ප්‍රශ්නවලට උත්තර ලියමු.


01 வீட்டில் வளர்க்கும் பறவைகள் ஐந்தினை எழுதுக.

02 காட்டுப் பறவைகள் ஐந்து எழுதுக.

03 யானைகள் சரணாலயம் எங்கே அமைந்துள்ளது.

04 மிருகங்களின் உருவத்தில் பெரியது எது?


05 பிஞ்சுகள், காய்கள், பழங்கள் என்பவற்றை உணவாக உட்கொள்பவை எவை?



## செயற்பாடு 02

உரத்து வாசிப்போம்
හඬ නගා කියවමු

| | |
|---|---|
| காட்சிகள் | காணலாம் |
| படம் | பார்க்கலாம் |
| விளையாட | போகலாம் |
| பேச்சு | பேசலாம் |
| உணவு | சாப்பிடலாம் |
| விளையாட்டுக்கள் | விளையாடலாம் |
| கதை | கேட்கலாம் |
| பால் | குடிக்கலாம் |
| புத்தகம் | படிக்கலாம் |



## செயற்பாடு 03

பின்வரும் சொற்களை வைத்து இடைவெளி நிரப்புவோம்.
**පහත සඳහන් වචන යොදා හිස්තැන් පුරවමු.**

(இயந்திரங்கள், பிரயாணிகள், மிருகக்காட்சிச்சாலை, பிரயாணிகளை, காட்டில்)


1. வீடுகளில் ......................................... வளர்க்கின்றார்கள்.

2. யானைகள் சரணாலயத்திற்கு உல்லாசப் ................................................................ வருகின்றனர்

3. மாடுகளில் இருந்து .............................................................. மூலமாக பால் கறக்கப்படுகின்றது.

4. சிங்கம், புலி என்பன ............................................................ வாழ்கின்றன.


5. .................................................................. தெஹிவளையில் உள்ளது.



## செயற்பாடு 04

ஒருமை சொற்களை பன்மையில் எழுதுவோம்.
ඒක වචන පද බහු වචනයට හරවා ලියමු.

| | | |
|---|---|---|
| 01 | ஆடு | ஆடுகள் |
| 02 | மாடு | ........................................................................ |
| 03 | பூனை | ........................................................................ |
| 04 | நாய் | ........................................................................ |
| 05 | யானை | ........................................................................ |



## செயற்பாடு 05

ஐந்து மிருகங்களின் பெயர்களைத் தமிழில் எழுதுவோம்.
සතුන් පස් දෙනෙකුගේ නම් දෙමළෙන් ලියමු.

01) ........................................................................................

02) ........................................................................................

03) ........................................................................................

04) ........................................................................................

05) ........................................................................................

## செயற்பாடு 06

ஐந்து பறவைகளின் பெயர்களை தமிழில் எழுதுவோம்.
පක්ෂීන් පස් දෙනෙකුගේ නම් දෙමළෙන් ලියමු.

01) ..............................................................................................

02) ..............................................................................................

03) ..............................................................................................

04) ..............................................................................................

05) ..............................................................................................


## செயற்பாடு 07

பின்வரும் தலைப்புக்களில் ஐந்து வசனங்களை பேசுவோம்.
පහත සඳහන් මාතෘකා යටතේ වාක්‍ය පහක් ලියා ඒවා කියවන්න.


(அ) எனது செல்லப் பிராணி.

(ஆ) வண்ணத்துப் பூச்சி.

**பெயர்ச் சொல் அறிமுகம்.**
**නාම පද හඳුනා ගනිමු.**




**வினைச் சொல் அறிமுகம்.**
**ක්‍රියා පද හඳුනා ගනිමු.**



**சேர்ந்து பாடுவோம்.**
**එක් ව ගයමු.**



## புள்ளி மான்

புள்ளிப் புள்ளி மானே
துள்ளித் துள்ளி ஓடி வா
அள்ளி இந்த புள்ளியை
ஆர் உனக்குத் தந்தது?

## வண்ணத்துப் பூச்சி



வண்ணத்துப் பூச்சி, வண்ணத்துப் பூச்சி
பறக்குது பார் பறக்குது பார்
அழகான செட்டை அழகான செட்டை
அடிக்குது பார் அடிக்குது பார்.

**ஆசிரியர் மாணவர்களுடன் சேர்ந்து பாடுவோம்.**

**‘‘உம்’’ இடைச் சொல் வரும் விதம்**
**‘‘உம்’’ යෙදෙන විධි**

மிருகங்களும் பறவைகளும் (உம்)

ஆடும் மாடும்


நானும் நீயும்

தாயும் தந்தையும்

கீரியும் பாம்பும்

தாயும் பிள்ளையும்

சோறும் கறியும்



**செயற்பாடு 08**
**மேலுள்ள சொற்களை வைத்து இடைவெளி நிரப்புவோம்.**
**ඉහත දී ඇති වචන යොදා හිස්තැන් පුරවන්න.**

01) ஆடும் மாடும் புல் மேய்ந்தன.

02) .......................... விளையாடினோம்.

03) ............................ பெரியவர்கள்.

04) ............................ வீட்டுக்குப் போனார்கள்.